


08.08.2024

தலைப்புச் செய்திகள்

1. மக்களவையில் வக்.ஃ.ப் வாரிய சட்ட திருத்த மசோதா இன்று அறிமுகம் செய்யப்பட்டது.

2. வேலை வாய்ப்பின்மை பிரச்சனையை தீர்க்க மத்திய அரசு 15 முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மான்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் நாடுமுழுவதும் 77 சதவிகித ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டில் தெரிவித்துள்ளார்.

4. மா மதுரை திருவிழாவை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

5. பாரீஸ் ஒலிம்பிக் ஆடவர் ஹாக்கி வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா இன்று ஸ்பெய்னை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

வக்.ஃ.ப் வாரியம்

வக்.ஃ.ப் வாரிய சட்ட திருத்த மசோதா மக்களவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்டது.

மத்திய சிறுபான்மையின நலத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ இதனை தாக்கல் செய்தார்.

1995 ஆம் ஆண்டு வக்.ஃ.ப் வாரிய சட்டத்திற்கு மாற்றாக இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

மாநில வக்ஃப் வாரிய செயல்பாடுகள், அதிகாரம், பதிவு, வக்ஃப் வாரிய சொத்துக்கள் தொடர்பான மாற்றங்களுக்கு இந்த திருத்த மசோதா வகை செய்கிறது.

இந்நிலையில் இதுதொடர்பாக அனைத்து கட்சி கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இந்த மசோதாவை சமாஜ்வாடி கட்சி எதிர்க்கும் என்று அக்கட்சி உறுப்பினர் திரு.ராஜீவ்குமார் ராய் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சிறுபான்மையினத்தை சேர்ந்த ஏழைய எளிய மக்களின் சொத்துக்களை வக்ஃப் வாரியம் எடுத்துக்கொள்வதாக பெறப்படும் புகாரை அடுத்து அவர்களுக்கு நீதி கிடைக்கவே இந்த சட்ட திருத்தம் கொண்டுவரப்படுவதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மான்சூக் மாண்டவியா

வேலை வாய்ப்பை முன்னெடுத்துச்செல்லும் வகையில் 15 முக்கிய திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்துவதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மான்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர் இதனால் வேலை வாய்ப்பின்மை 6 சதவிகிதத்திலிருந்து 3.2 சதவிகிதமாக குறைந்துள்ளது என்றார்.

பிரதமரின் ரோஸ்கர் யோஜனா திட்டத்தின் கீழ் ஒருகோடியே 21 லட்சம் பேருக்கு கடந்த 8 ஆண்டுகளில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

முத்ரா கடன் திட்டத்தின் கீழ் 18 கோடியே 29 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு 49 கோடி பேர் பயடைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஜல் ஜீவன்

ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் நாடுமுழுவதும் 77 சதவிகித ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டில் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர் இந்த திட்டம் தொடங்கப்பட்ட 5 ஆண்டுகளில் 15 கோடி வீடுகள் பயனடைந்திருப்பதாக கூறினார்.

தூய்மையான பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுவதால் நோய்கள் தடுக்கப்பட்டு 8 லட்சம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

வெளிநடப்பு – வினேஷ்

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் மல்யுத்த வீராங்கனை வினேஷ் ஃபோகத்தின் தகுதி நீக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மாநிலங்களவையிலிருந்து எதிர்கட்சிகள் இன்று வெளிநடப்பு செய்தன.

அவை இன்று கூடியதும் எதிர்கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே இப்பிரச்சனையை எழுப்ப முயன்றபோது அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதாதள் உள்ளிட்ட எதிர்கட்சிகள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தன.

எதிர்கட்சிகளின் இந்த செயலுக்கு அவைத்தலைவர் திரு.ஜக்தீப் தன்கர் எதிர்ப்பு தெரிவித்தார்.

இவ்விவகாரம் குறித்து பேசிய அவைத்தலைவர் குடியரசுத்தலைவர், பிரதமர், தாம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் வினேஷின் தகுதிநீக்கம் குறித்து மிகவும் வேதனைப்படும் தருணத்தில் இவ்விஷயத்தை அரசியலாக்குவது அவருக்கு செய்யும் அவமரியாதையாகும் என்று குறிப்பிட்டார்.

வினேஷ் ஃபோகத் பதக்கத்தை வென்றதாகவே கருதப்பட்டு அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று ஹரியானா அரசு தெரிவித்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்கட்சிகளின் செயலுக்கு மத்திய அமைச்சர் திரு.ஜே.பி.நட்டாவும் கண்டனம் தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

வெளிநடப்பு

வெங்காயம் மற்றும் உருளை கிழங்கின் விலை ஏற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருந்து இன்று வெளிநடப்பு செய்தனர்.

விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலைக்கான சட்டப்பூர்வமான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்று எதிர்கட்சிகள் கோரின.

சிவசேனா, திரிணாமுல் காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதாதள், காங்கிரஸ், தேசிய வாத காங்கிரஸ் கட்சிகள் இதுதொடர்பான ஆர்பாட்டத்தில் பங்கேற்றன.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட வயநாடு மாவட்டத்தை நாளை மறுநாள் பார்வையிடுகிறார்.

வான்வழியாக பிரதமர் பாதிக்கப்பட்ட இடங்களை ஆய்வு செய்ய உள்ளார்.

பிரதமரின் வருகையை ஒட்டி சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான உயர்நிலை கூட்டம் கண்ணூர் மற்றும் வயநாடில் இன்று நடைபெற்றது.

இதனிடையே வயநாட்டில் புதிதாக அமைக்கப்பட்ட பெய்லி பாலத்தை வலுப்படுத்தும் பணியில் ராணுவ வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் மீட்பு பணிகளை மேற்கொண்ட ராணுவ படையினர் வயநாடு ஆட்சியரகத்தில் இன்று அன்புடன் வழியனுப்பிவைக்கப்பட்டனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ரிசர்வ் வங்கி

ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடனுக்கான ரிப்போ வட்டி விகிதங்களில் மாற்றம் எதுவும் இல்லை என்று வங்கி ஆளுநர் திரு.சக்தி காந்த தாஸ் அறிவித்துள்ளார்.

மும்பையில் இன்று இருமாத நிதிக்கொள்கையை வெளியிட்டு பேசிய அவர், ரிப்போ வட்டி விகிதம் தொடர்ந்து 6.5 சதவிகிதமாக நீடிக்கும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து 9 ஆவது முறையாக ரெப்போ வட்டிவிகிதத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் வரை தொடர்ச்சியாக ஆறுமுறை வட்டி விகிதங்கள் உயர்த்தப்பட்டு வந்த நிலையில், அதன் பின்னர் எவ்வித மாற்றமும் இல்லாமல் வட்டி விகிதம் தொடர்ந்து அதே நிலையில் நீடிக்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஹர் கர் திரங்கா

தேசப்பற்றை ஊக்குவிக்கும் வகையில் ஹர் கர் திரங்கா இல்லந்தோறும் தேசிய கொடியை ஏற்றுவோம் இயக்கம் நாளை தொடங்கப்படுகிறது.

மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் புதுதில்லியில் இன்றுமாலை இந்த இயக்கத்தை துவக்கிவைக்கிறார்.

75ஆவது விடுதலை தின நிறைவை ஒட்டி தொடங்கப்பட்ட சுதந்திர அமுத பெருவிழாவின் ஒருபகுதியாக இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தின் கீழ் வரும் 13ஆம் தேதியிலிருந்து 15 ஆம் தேதிவரை குடிமக்கள் தங்கள் இல்லங்களில் தேசிய கொடியை ஏற்ற கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேசிய கொடியுடன் செல்ஃபி புகைப்படத்தை இதுதொடர்பான இணையதளத்தில் மக்கள் பதிவேற்றம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வேற்றுமையில் ஒற்றுமை என்ற இந்தியாவின் கோட்பாட்டை முன்னெடுத்துச்செல்லும் வகையில் இந்த இயக்கம் முக்கியத்துவம் பெறுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

வெள்ளையனே வெளியேறு

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 82ஆவது ஆண்டு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராக தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் 1942ஆம் ஆண்டு இதே நாளில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தொடங்கினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

குடியரசுத்தலைவர்

தேச கட்டமைப்பிலும் சமூக மாற்றத்திலும் கல்வி ஒரு இன்றியமையா அங்கமாக திகழ்கிறது என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து தலைநகர் வெலிங்டனில் சர்வதேச கல்வி மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், நாட்டின் கல்வி தரத்தை மேம்படுத்த, மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

இந்த கல்வி மாநாடு இரு நாடுகளுக்கிடையே கல்வித்துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதோடு, புதிய வாய்ப்புகளுக்கான திறவுகோலாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாக வெலிங்டன் சென்ற குடியரசுத்தலைவருக்கு அந்நாட்டின் பாரம்பிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

வெலிங்டன் ரயில் நிலையம் அருகே உள்ள காந்தியடிகளின் திருவுருவ சிலைக்கு திருமதி திரௌபதி முர்மு அஞ்சலி செலுத்தினார்.

புகேஹூ தேசிய போர் நினைவிடத்தில் அவர் அஞ்சலி செலுத்தினார்.

குடியரசு தலைவர் நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஷன் உள்ளிட்டோருடன் இன்று பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

மதுரையின் மரபு, பண்பாட்டு கலாச்சாரத்தை கொண்டாடும் வகையில் மா மதுரை திருவிழாவை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர் இதுபோன்ற விழாக்கள் கூட்டுறவு எண்ணத்தையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற உணர்வையும் உருவாக்கும் என்று குறிப்பிட்டார்.

ஜாதி மத வேறுபாடுகளுக்கு இடமளிக்காமல் இப்பண்பாட்டு விழாக்களை கொண்டாட முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

பழமைக்கு பழமையாக, புதுமைக்கு புதுமையாக இளைஞர்கள் இயங்க வேண்டும் என்று அடிப்படையில் இவ்விழா கொண்டாடப்படுவது குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

நாட்டின் பழமையான நகரங்களில் ஒன்றான மதுரையின் பல்வேறு வரலாற்று சிறப்புகளை முதலமைச்சர் பட்டியலிட்டார்.

வரும் 11ஆம் தேதிவரை நடைபெறும் இவ்விழாவை இந்திய தொழில் கூட்டமைப்பினர் மற்றும் இளையோர் அமைப்பினர் முன்னெடுத்துச்செல்வதை அவர் பாராட்டியுள்ளார்.

வாய்ஸ்

இதனிடையே உயர்கல்வி மாணாக்கருக்கான தமிழ் புதல்வன் திட்டத்தை முதலமைச்சர் கோவையில் நாளை தொடங்கிவைக்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கிராமசபைக்கூட்டம்

தமிழ்நாட்டில் வரும் 15ஆம் தேதி சுதந்திரத்தினத்தன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் நடைபெறுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ராக்கெட்

புவி கண்காணிப்பிற்கான நுழுளு – 0 8 செயற்கைகோள் ஸ்ரீஹரிகோட்டா சத்திஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து வரும் 15ஆம் தேதி விண்ணில் செலுத்தப்படுகிறது.

சுதந்திர தின கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக அன்றைய தினம் காலை மணி 9.17க்கு சிறிய ரக ளுளுடுஏ னு-3 ராக்கெட் மூலம் இது விண்ணில் ஏவப்படுகிறது.

இந்த சிறிய ரக செலுத்து வாகனத்தை குறைந்த செலவில் இஸ்ரோ தயாரித்துள்ள நிலையில், குறைந்த கால அவகாசத்தில் குறைவான கட்டமைப்பு தேவைகளுடன், பல சிறிய செயற்கை கோள்களை ஒரே நேரத்தில் சுமந்து செல்லும் திறனுடன் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

500 கிலோ மீட்டர் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்துவதற்காக 500 கிலோ எடை கொண்ட செயற்கை கோள்களை இந்த சிறிய ரக செலுத்து வாகனம் வெற்றிகரமாக சுமந்து செல்லும் திறன்படைத்தது.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

சி.வி.கணேசன்

தமிழகம் முழுவதும் 71 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் 2 ஆயிரத்து 877 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவினப்படுத்தப்பட்டு வருவதாக மாநில தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று இதனை தெரிவித்த அவர் தொழிற்பயிற்சி பயிலும் அனைத்து மாணாக்கருக்கும் வேலை வாய்ப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக கூறினார்.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

பொன்முடி

விழுப்புரம் மண்டலத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 371 புதிய பேருந்து சேவை தொடங்கப்பட்டுள்ளதாக
மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் 25 புதிய பேருந்துகள் போக்குவரத்தை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் போக்குவரத்து தொழிலாளர்கள் பொதுமக்களின் நலத்தை முன்னிறுத்தி பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

வெலிங்டன்

கோவை மாவட்டம் சூலூரில் கூட்டு விமான போர் படை பயிற்சிக்காக வந்துள்ள ஜெர்மன் விமானப்படையினர் மேட்டுப்பாளையத்திலிருந்து வெலிங்டன் ராணுவ முகாமிற்கு சென்றுள்ளனர்.

தரங் சக்தி 2024 ராணுவ கூட்டு போர் பயிற்சியின் ஒருபகுதியாக வெலிங்டன் ராணுவ பயிற்சி முகாமில் இப்படையினர் பல்வேறு போர் பயிற்சிகளில் பங்கேற்கின்றனர்.

நம் நாட்டின் தொழில்நுட்பம் தொடர்பான நுணுக்கங்கள் குறித்தும் இதில் ஆலோசனைகள் இடம்பெறும் என தெரிகிறது.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூ

மீனவர்கள்

கோடியக்கரை அருகே கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த நாகை வேதாரண்யத்தை சேர்ந்த 5 மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

படகிலிருந்த வலைகள் மற்றும் மீன்கள் உள்ளிட்ட பொருட்களை பறிமுதல் செய்துள்ளனர்.

*காயமயடைந்த மீனவர்கள் சிகிச்சைக்காக வேதாரண்யம் அரசு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழூழூழூழூழூழூழூழூழூழூழூ

ஆழியாறு

மேற்குதொடர்ச்சி மலை பகுதிகளில் கன மழை காரணமாக கோவை மாவட்டம் ஆழியாறு அணை நிரம்பியதை அடுத்து உபரி நீர் வெளியேற்றப்படுவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஒகேனக்கல் ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 8 ஆயிரம் கன அடியாக இன்று குறைந்துள்ளதை அடுத்து காவிரி ஆற்றில் பரிசல் இயக்க மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

குளிப்பதற்கான தடை நீடிப்பதாக தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சாந்தி தெரிவித்துள்ளார்.

இதனிடையே நீர்வரத்து சீரானதால் கும்பக்கரை அருவியில் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூ

பொறியியல் சேர்க்கை

பொறியியல் மாணாக்கர் சேர்க்கை தொடர்பான தவறான தகவல்களை நம்ப வேண்டாம் என்று தொழில்நுட்ப கல்வி இயக்ககம் அறிவுறுத்தியுள்ளது.

மாணவர் சேர்க்கை தொடர்பான அங்கீகரிக்கப்படாத தொலைபேசி அழைப்புகளை நம்ப வேண்டாம் என்று கூறியுள்ள இயக்ககம் தரவரிசை பட்டியலுடன் மாணாக்கரின் செல்ஃபோன் எண்களை சேர்த்து வெளியிட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

திருச்சி நாமக்கல் மாவட்டங்களில் பொதுவிநியோக திட்ட சிறப்பு குறைதீர் முகாம் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில், போதைபொருள் தடுப்பு மற்றும் சட்ட விழிப்புணர்வு முகாம்கள் வரும் டிசம்பர் மாதம் வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் பள்ளி மாணாக்கர் பங்கேற்க வரும் செப்டம்பர் 20ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

இந்தியன் வங்கியின் 118ஆம் ஆண்டு நிறுவன தின கொண்டாட்டங்களை ஒட்டி வேலூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் விழிப்புணர்வு பேரணிகள் நடைபெற்றன.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஒலிம்பிக்

பாரீஸ் ஒலிம்பிக் ஆடவர் ஹாக்கி வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா இன்று ஸ்பெயினை எதிர்கொள்கிறது.

ஈட்டி எறிதல் இறுதி சுற்றில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா இன்று களமிறங்குகிறார்.

மகளிர் 100 மீட்டர் தடை தாண்டுதல் போட்டியில் இந்தியாவின் ஜோதி யாரஜி இன்று விளையாடுகிறார்.

மல்யுத்தம் 57 கிலோ ஃப்ரீ ஸ்ட்டைல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுகளில் ஆடவர் பிரிவில் அமன் ஷெராவத்தும்,

மகளிர் பிரிவில் அன்ஷூவும் இன்று விளையாட உள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது